**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

OS 105/2023

16.04.2026.

PW- 1

**வா.சா.1. கவிதா, க/பெ.மணவாளன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

பிரதிவாதியும் நானும் ஒரே கிராமத்தினை சேர்ந்தவர்கள் என்றால் - சரிதான். நான் மகளிர் சுய உதவி குழுவில் தலைவியாக இருந்து நடத்தி வருகிறேன் என்றால் - சரியல்ல. பிரதிவாதி எந்த வகையில் பழக்கம் என்றால் - ஒரே ஊர் என்பதால் பழக்கம். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் - படித்து பார்த்தேன். நான், பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டைதான் என்னிடம் காட்டப்படுவது தான் என்றால் - சரிதான். ஒப்புதல் அட்டையில் பிரதிவாதி போட்டுள்ள கையெழுத்தும் பிராமிசரி நோட்டில் போட்டுள்ள கையெழுத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் - பிராமிசரி நோட்டில் அவர் கையெழுத்து போட்டார். ஒப்புதல் அட்டையில் உள்ள கையெழுத்தில் வேறுபாடு உள்ளது என்றால் - சரிதான். பிராமிசரி நோட்டு எழுதும்போது சாட்சிகள் யார் யார் இருந்தார்கள் என்றால் - நானும் எனது கணவரும் மாரியப்பனும் இருந்தோம். மாரியப்பன் ஆவண எழுத்தர். ஆவண எழுத்தர் முன்பு பணம் கொடுத்தேன். பிராமிசரி நோட்டில் யார் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்றால் - என் கணவர் மட்டும் ஒரு சாட்சி கையெழுத்து போட்டார். வேறு யாரும் போடவில்லை. எனக்கும் பிரதிவாதிக்கும் உள்ள பிரச்சினை விமலாதித்தன் என்பவருக்கு தெரியும். விமலாதித்தனுக்கும் எனக்கும் எந்த பிரச்சினையும் இல்லை. விமலாதித்தனை கூப்பிட்டு விசாரித்தால் என்ன பேசப்பட்டது என்ன நடந்தது என்ற விவரம் தெரியும் என்றால் - சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் பின்பக்கம் எழுதப்பட்ட வாசகம் சம்மந்தமாக சாட்சி கையெழுத்தோ, ஆவணத்தை எழுதியது யார் என்றோ குறிப்பு இல்லை என்றால் - சரிதான். வா.சா.ஆ.1ன் பின்பக்கம் பகுதி வரவு வைக்கப்பட்டதாக சொல்லப்படும் தேதி வரையிலான இடைப்பட்ட காலத்தில் எந்த சட்ட நடவடிக்கையும் நான் எடுக்கவில்லை என்றால் - சரிதான். நடவடிக்கை எடுக்காததற்கு காரணம் உள்ளதா என்றால் - பணம் தருவதாக சொன்னதால் எடுக்கவில்லை. இந்த விவரங்கள் எதுவும் எனது நிருபண வாக்குமூலத்திலோ எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் - சரிதான். வா.சா.ஆ.1ல் பின்பக்க வரவு என்பது காலாவதியை தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் - சரியல்ல. ரூ.8 இலட்சம் கடனாக கொடுக்கப்பட்ட பணம் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்று எனது வழக்குரையிலோ வழக்கறிஞர் அறிவிப்பிலோ சொல்லியுள்ளேனா என்றால் - இல்லை. வா.சா.ஆ.1ன் பின்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அசல், வட்டி தொகை என்ற குறிப்பில் எவ்வளவு அசல், வட்டி என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் - சரிதான். என்னிடம் பிரதிவாதி ரூ.3 இலட்சம் தான் கடனாக பெற்றார் என்றாலும் அந்த தொகை சம்மந்தமாக எங்களுக்குள் பேசி முடிக்கப்பட்டு முழு தீர்வடைவாக இரண்டு தவணைகளாக ரூ.5 இலட்சம் பெற்றுக்கொண்டுள்ளேன் என்றால் - சரியல்ல. மேற்கண்ட விவரங்களை மறைத்து போலியாக

ஒரு ஆவணத்தை உற்பத்தி செய்து இந்த பிரதிவாதியிடமிருந்து சட்டத்திற்கு புறம்பான வகையில் ஒரு பணப்பலனை அடையவேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் - சரியல்ல. எனது வழக்குரையில் சொல்லியுள்ளது போல ரூ.8 இலட்சம் எந்த தேதியிலும் கொடுக்கவில்லை என்றாலும் அவ்வாறு கொடுத்திருந்தால் ஊரில் வேறு சாட்சிகள் முன்னிலையில் கொடுத்திருப்பேன் என்றாலும் அதனால் வா.சா.ஆ.1 ஆவணமானது சட்டப்படி நிறைவேற்றக்கூடிய ஆவணம் அல்ல என்றாலும் அந்த ஆவணத்தின் படி நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றாலும் -சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்து போல எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் நடைப்பெற்றதாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் - சரியல்ல. எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே எந்தவொரு கொடுக்கல் வாங்கலும் நிலுவையில் இல்லை என்றாலும் அவரது கையொப்பத்தினை போலியாக இட்டு தயார் செய்யப்பட்ட வா.சா.ஆ.1ன் அடிப்படையில் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றாலும் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி
மன்னார்குடி.